# கலவான பிரதேச சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மே 03 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 03 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜனவரி 28 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 10,128,902 செலவில் நிர்மாணிக்கப்பட்ட மயானத்தின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டுக் கணக்கில் சீராக்கல் செய்யப்படவில்லை.

(ஆ) செயற்பாடற்ற கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையாகிய ரூபா 215,811 தொடர்பாக ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) செலவினப் பேரேட்டினதும் செலவினப் பதிவேட்டினதும் பல்வேறு 16 செலவின விடயங்களுக்கிடையே ரூபா 9,371,058 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) பதினொரு கணக்கீட்டு விடயங்களது கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 21,135,893 ஆகும். உப பதிவேட்டின் படி மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 19,328,377 ஆகும்.

(உ) உள்ளூர்க் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற மீளாய்வாண்டிற்கான வட்டியாகிய ரூபா 155,845 வட்டிக் கணக்கின் மூலம் வருமான, செலவினக் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் கடன் கொடுத்தோர் கணக்கின் கீழ் சீராக்கல் மேற்கொண்டு, அவ்வாண்டிற்கான செலவினத்தில் சீராக்கல் செய்யப்பட வேண்டியகிய ரூபா 884,014 மீளாய்வாண்டிற்கான செலவினத்தில் சீராக்கல் செய்யப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டமையால் ரூபா 19,440,573 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தமுடியவில்லை.

(ஆ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 30 கடன்கொடுத்தோர் மீதிக்கான ரூபா 4,196,983 கூட்டுத்தொகைக்குரிய உறுதிச் சான்றுகள், விலைப்பட்டியல் போன்ற உறுதிப்படுத்தலுக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 3,844,692 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 6,199,186 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் தோற்றுவாய் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 1,628 | 3,681 | 3,915 |
| (ii) | குத்தகை வாடகை | - | - | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 900 | 524 | 375 |
| (iv) | பிற வருவாய் | 12,509 | 17,025 | 2,514 |

### 2.2.2 பிற வருவாய்

1987 பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் கீழ் ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் வருடாந்த வருவாயில் 1 சதவீதக் கட்டணம் அறவிடப்படக் கூடிய இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள்/சிற்றூண்டிச் சாலைகள்/ தங்குமிடங்கள் என்பவற்றை இனங்கண்டு குறித்த பிரேரனைக்கமைய வருவாயை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.2.3 தெரு வருவாயை வாடகைக்கு வழங்குதல்

(அ) தெரு வருவாயை வாடகைக்கு வழங்குவதற்கு 2010 ஒக்டோபரில் அரச அபிவிருத்தி நிர்மாணக் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை ஒன்று செய்துகொள்ளப்பட்டது. 2009 டிசெம்பர் முதல் 2011 நொவம்பர் வரையான 21 மாத காலங்களிற்கு ரூபா 1,864,007 அறவிடப்பட முடியாதிருந்தது. அத்தொகையை அறவிடுவதற்குக் கணக்காய்வுத் தினமான 2012 டிசெம்பர் 14 வரை முறையான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை.

(ஆ) 2011 டிசெம்பர் தொடக்கம் கனேகொட கன்ஷ்ட்ரக்னஸ் எனப்படும் தனியார் நிறுவனத்திற்குத் ஒரு உருளையை வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக மீளாய்வாண்டு முடிவில் ரூபா 522,494 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாநகர சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 264,721 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 2,500,000 |

**2.3 போதிய அதிகாரத்தன்மைத் கொடுக்கல் வாங்கல்கள்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை நிதியத்திலிருந்து செலவு மேற்கொள்வதற்கு சட்டபூர்வ நிதியேற்பாடின்றி ரூபா 21,360 செலவிடப்பட்டிருந்தது.

**2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்துடன் நேரடித் தொடர்புடையதா என்பதை உறுதி செய்யாது மீளாய்வாண்டு ஜனவரி தொடக்கம் நவம்பர் வரையான காலப்பகுதியில் தலைவருக்குச் சீவனப்படியாக ரூபா 24,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2012 டிசெம்பர் 08 ஆந் திகதிய பலவின்ன முற்பணம் கொங்கீரிட் பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்தின் மூலம் 11 விலைப்பட்டியல்களினூடாக ரூபா 707,441 அறவிடப்பட வேண்டியுள்ளதற்கமைய அத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் வழங்கப்பட்ட ஹியூம் குழாய்க் கையிருப்பு பதிவேடுகளில் பதிவு செய்யப்படவோ அல்லது விலைப்பட்டியல் உறுதிசெய்யப்படவோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.5 செயற்பாட்டு வனைத்திறமையின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) க்கமைய குறித்தவொரு விடயத்திற்குப் பெறப்பட்ட முற்பணம் அவ்விடய முடிவில் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், ரூபா 100,000 க்கான 2 முற்பணமானது 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் முற்பணம் பெற்பட்டு 1 ஆண்டும் 6

மாதங்களும் கடந்து விட்ட நிலையில் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) சபையில் வெற்றிடமாகிய வருவாய் கட்டுப்பாட்டாளர் பதவிக்கு 2011 நவெம்பர் 17 ஆந் திகதி தொடக்கம் வாரத்தில் இரு நாட்கள் பணிபுரியும் அடிப்படையில் உள்ளூராட்சி ஆணையாளரால் வருவாய் கட்டுப்பாட்டைக் உருவர் நியமிக்கப்பட்டபோதும், அந் நியமனத் திகதி தொடக்கம் 2012 நவம்பர் 10 வரை ஏறக்குறைய ரூபா 128,628 வருவாய் சேகரிப்பர்ாட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட தொகையுடன் அதனை ஒப்பிடுகையில் அது 0.3 க்கும் 11.8 க்கும் இடையேயான குறைந்த சதவீதத்தில் அமைந்திருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 423,242 கூட்டுத்தொகையுடைய 55 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) காலங் கடந்த ரூபா 2,710,120 கூட்டுத்தொகையுடைய வைப்புக்கள் தொடர்பாக இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் 571 ஆம் 572 ஆம் நிதிப்பிரமாணங்களுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) சப்ரகமுவ மாகாண முதலமைச்சரது செயலாளரின் 2010 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2010 ஆம் இலக்கச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக, சபையானது 2012 டிசெம்பர் 14 ஆந் திகதியளவில் சமயாசமய, ஒப்பந்த அடிப்படையில் 7 ஊழியர்களை ஆட்சேர்த்து 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 1,271,263 சம்பளமாக வழங்கியிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு

(ii) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(iii) வருவாய் நிர்வாகம்

(iv) மனித வள முகாமைத்துவம்